**சுருக்கம்**

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – 2024–ஆம் ஆண்டு சுதந்திர தின விழா – மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்த நபர்கள் / நிறுவனங்கள் – தமிழக அரசின் மாநில விருதுகள் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை**

**அரசாணை (ப) எண். 17** **நாள்: 06.08.2024,**

**குரோதி, ஆடி – 21,**

**திருவள்ளுவர் ஆண்டு, 2055.**

**படிக்க :**

1. அரசாணை (நிலை) எண்.29, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, நாள் 08.08.2011.
2. அரசாணை (நிலை) எண்.13, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, நாள் 03.05.2017.
3. அரசாணை (2ப) எண்.1, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, நாள் 29.07.2022.
4. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் ந.க.எண்.2148/ உ.உ.பிரிவு/2024, நாள் 18.07.2024.

******

**ஆணை:**

ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தின விழாவின் போது மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவைகள் புரிந்த கீழ்கண்ட பிரிவுகளைச் சேர்ந்த நபர்கள்/நிறுவனங்களுக்கு தமிழக அரசின் மாநில விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன:-

1) மாவட்ட ஆட்சித் தலைவர்.
2) மருத்துவர்.
3) வேலை வாய்ப்பளித்த தனியார் நிறுவனம்.
4) அரசு சாராத தொண்டு நிறுவனம்.
5) சேவை புரிந்த சமூகப் பணியாளர்.
6) சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி.

2. மேலே முதல் மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக சேவைகள் புரிந்த நபர்கள் / நிறுவனங்களுக்கு மாநில விருதுகள் வழங்குவதற்கான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்தவர்கள் / தொண்டு நிறுவனங்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் சுதந்திர தினவிழா மற்றும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று வழங்கப்படும் மாநில விருதுகளுக்கு உரிய விருதாளர்களை தேர்வு செய்யும் மாநில அளவிலான தேர்வுக்குழு மறுசீரமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

4. இதன்படி 2024–ஆம் ஆண்டிற்கான சுதந்திர தின விழாவின் போது தமிழக அரசின் மாநில விருதுகள் வழங்குவதற்கென, மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்த நபர்கள் / நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து தகுதி வாய்ந்த நபர்கள் மற்றும் நிறுவனங்களை தேர்வு செய்யும் பொருட்டு 15.07.2024 அன்று தேர்வுக் குழுவின் கூட்டம், மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் செயலாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விருதுகள் பெறுவதற்கு தகுதியான விண்ணப்பங்களை தேர்வுக் குழு உறுப்பினர்கள் ஆய்வு செய்து வழங்கிய ஆலோசனையின்படி, 2024–ஆம் ஆண்டிற்கான சுதந்திர தினவிழாவின் (ஆகஸ்ட்15/2024) போது பின்வரும் நபர்கள் / நிறுவனங்களுக்கு தமிழக அரசின் மாநில விருதுகளை வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது:-

| வ. எண். | விருதின் வகை | | விண்ணப்பதாரரின் பெயர் |
|---|---|---|---|
| 1 | சிறந்த மாவட்ட ஆட்சியர் | 1 | 1. டாக்டர் V.P. ஜெயசீலன், இ.ஆ.ப.,<br>மாவட்ட ஆட்சியர்<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்,<br>குமாரசாமிராஜா நகர்,<br>விருதுநகர் மாவட்டம்–626002.<br>2. திரு. கிராந்திகுமார் பாடி, இ.ஆ.ப.,<br>மாவட்ட ஆட்சியர்,<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்,<br>கோயம்புத்தூர் மாவட்டம் – 641018 |
| 2 | சிறந்த மருத்துவர் | 1 | மரு. J.விஜயலட்சுமி,<br>ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம் (NIEPMD)<br>கிழக்கு கடற்கரைசாலை,<br>முட்டுக்காடு, கோவளம்,<br>செங்கல்பட்டு – 603112, |
| 3 | சிறந்த நிறுவனம் | 1 | வித்யா சாகர்,<br>எண்.1, ரஞ்ஜித் ரோடு, கோட்டூர்புரம்,<br>சென்னை–600085, |
| 4 | சிறந்த சமூக பணியாளர் | 1 | திரு. M. சூசை ஆன்டனி,<br>எண்.2/110, வைத்தியர் தெரு,<br>திரிசூலம், சென்னை–600043, |
| 5 | மாற்றுத் திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய நிறுவனம் | 1 | 1. திருவாளர், மிண்டா கார்பரேஷன் லிமிடேட்,<br>எண்.பி7, பி8, சிப்காட் தொழிற்பூங்கா,<br>வெங்காடு கிராமம், பிள்ளைபாக்கம்,<br>ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா,<br>காஞ்சிபுரம்–602105.<br>2. திருவாளர். தேங்யூ புட்ஸ்,<br>எண்.2150, சுந்தராஜன்பட்டி,<br>அழகர்கோயில் மெயின்ரோடு,<br>மதுரை–625104. |

| | | | |
|---|---|---|---|
| | | | 3. திருவாளர்.சந்தானம் பேக்கேஜிங் பிரைவேட் லிமிடெட், எண்.2/79, எப்.மேலவிட்டான் ரோடு, சில்வர்புரம், தூத்துக்குடி–628002. |
| 6 | சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி | 1 | மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, காஞ்சிபுரம் மாவட்டம். |

5. இவ்விருதுகள் (மாவட்ட ஆட்சியர்கள் விருதினை தவிர) 2024–ஆம் ஆண்டு சுதந்திர தினவிழாவின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும். மேலும், **மாவட்ட ஆட்சியருக்கான விருதுகள் மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் வழங்கவும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.**

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சிஜி தாமஸ் வைத்யன்,**
**அரசு செயலாளர்**

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை–5.
சம்பந்தப்பட்ட நபர்கள் / நிறுவனங்கள்
(மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
பொது (பொது–1)த் துறை, சென்னை–9.
தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி, சென்னை–1.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

07/08/2024
**பிரிவு அலுவலர்**
07-08-2024